Civil Services (Main)
Examination, 2026

**KVMS-U-TML**

# தமிழ் / TAMIL

**தாள் I / Paper I**

**(இலக்கியம்) / ( LITERATURE )**

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : **250** |
| *Time Allowed : **Three** Hours* | *Maximum Marks : **250*** |

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுத *முனையுமுன்* பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடர வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

## SECTION A

**Q1.** **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) தமிழ்மொழியின் தொன்மை குறித்து எழுதுக. *10*

(b) தமிழில் காலம் காட்டும் விகுதிகளைக் கூறி, ஒவ்வொன்றுக்கும் சான்று தருக. *10*

(c) 'இரட்டைக் காப்பியங்கள்' - பெயர்க் காரணம் கூறுக. *10*

(d) தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்களிப்பு. *10*

(e) சிற்றிலக்கியத்தில் 'உலா'-வின் சிறப்புகள். *10*

**Q2.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) இந்திய மொழிக் குடும்பத்தில், திராவிட மொழிகளின் தனிச்சிறப்புகள். *20*

(b) புறத்திணை பற்றித் தொல்காப்பியர் கூறுவன யாவை ? *15*

(c) பாவைப் பாடல்களின் தனித்தன்மைகள் குறித்து ஆய்க. *15*

**Q3.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) இலக்கியத் தமிழுக்கும், பேச்சுத் தமிழுக்கும் உள்ள வேறுபாடுகள். *20*

(b) சிலப்பதிகாரம் 'மூவேந்தர் காப்பியம்' - நிறுவுக. *15*

(c) புதுக்கவிதை வளர்ச்சியில் பாரதியாரின் பங்கு. *15*

**Q4.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) பல்லவர் காலத் தமிழில் வடசொற்களின் ஆதிக்கம். *20*

(b) சங்க காலத்தில் புலவர் - புரவலர் உறவுநிலை குறித்து ஆய்க. *15*

(c) சிறுகதை வளர்ச்சியில் புதுமைப்பித்தனின் பங்களிப்பு. *15*

## SECTION B

**Q5. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) திறனாய்வு அணுகுமுறையில் வரலாற்றியலின் முக்கியத்துவம் குறித்து எழுதுக. *10*

(b) ‘உள்ளுறை’ என்றால் என்ன ? சான்று தருக. *10*

(c) நாட்டுப்புற இயலின் வகைப்பாடுகள் யாவை ? *10*

(d) மொழிபெயர்ப்பின் நோக்கங்கள் யாவை ? *10*

(e) சங்ககாலப் போரின்போது பின்பற்றிய அறநெறிகள். *10*

**Q6. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) ‘‘விடுகதைகள், அறிவுச் சிந்தனையைத் தூண்ட வல்லவை’’ - ஆராய்க. *20*

(b) ஒப்பிலக்கியத் திறனாய்வின் அடிப்படைக் கூறுகள் யாவை ? *15*

(c) பிற்காலச் சோழர்களின் கட்டடக்கலை வளர்ச்சி. *15*

**Q7. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறநெறிக் கருத்துகள். *20*

(b) நாட்டுப்புறவியலில் கதைப்பாடல்கள் தோன்றிய விதத்தை விவரி. *15*

(c) மேனாட்டார் வருகையால் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் சமூக மாற்றங்கள். *15*

**Q8. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) தமிழர் வாழ்வில், நாட்டுப்புறச் சடங்குகள் இன்றளவும் நடைமுறையில் இருப்பதை ஆய்க. *20*

(b) புதுக் கவிதைகளில் ‘படிமம்’ பெறும் இடம். *15*

(c) சமணர் வருகையால் தமிழ்ப் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள். *15*